DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| STC.No. | 365/2023 |
| Prosecution: | அ.சா.3 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | ப்ரியதர்ஷினி |
| **Father Name** | ~ | ஜெயராஜ் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 04.07.2025.**

**நீதிமன்ற கேள்வி-1** - தற்போது எந்த வங்கியில் எந்த பதவியில் வேலை பார்த்து வருகிறீர்?

**பதில்-** யூனியன் பேங்க் ஆப் இண்டியா குரோம்பேட்டை கிளையில் உதவி மேலாளராக 1 மாதமாக பணியாற்றி வருகிறேன்.

**நீதிமன்ற கேள்வி-2** - எதன் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறீர் என்றால்?

**பதில்-** எனது வங்கியில் பராமரிக்கப்பட்டு வரும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது குரோம்பேட்டை யூனியன் பேங்க் கிளையில் உதவி மேலாளராக பணியாற்றி வருகிறேன். எனது வங்கியில் எனக்கு என்ன வேலை வழங்கப்பட்டுள்ளது

என்றால் எனது வங்கியில் நடைபெறும் புதிய கணக்குகள் காசோலை வழங்குதல் மற்றும் கணக்கு தொடங்குதல் மற்றும் பண பரிவர்த்தனை மற்றும் இதர வங்கி வேலைகள் செய்து வருகிறேன். ம.சா. 3 முதல் விசாரணையில் காசோலையானது வெள்ளத்தினால் காணாமல் போனதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆவணங்களின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளார். வழக்கு காசோலை மதிப்பு மறுக்கப்பட்டது வெள்ளம் ஏற்படுவதற்கு முன்பா அல்லது பின்பா என்றால் வெள்ளம் ஏற்படுவதற்கு முன்பாக மதிப்பு மறுக்கப்பட்டது. புகார்தாருக்கு காசோலை மதிப்பு மறுக்கப்பட்டது எவ்வாறு தெரிவித்தேன் என்றால் புகார்தாரர் வங்கிக்கு வந்த பின்பு திருப்புதல் குறிப்பாணை வழங்கப்பட்டு தெரிவிக்கப்பட்டது.

மேற்படி காசோலை தொலைந்து போனது குறித்து காவல் நிலையத்தில் எனது வங்கியில் இருந்து புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அது வெள்ளத்தில் காணாமல் போனது. பொதுவாக ஆவணம் தொலைந்தது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட வேண்டும் என்றால் எனது வங்கியின் மேல் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தோம். பொதுவாக காசோலை வங்கியில் இருந்து காணாமல் போகும் பட்சத்தில் என்ன நடவடிக்கை எடுப்பேன் என்றால் காசோலை தாக்கல் செய்த நபருக்கு தகவல் தெரிவித்து மேலாளர் காசோலை தொலைந்ததற்கு உண்டான காரணம் குறிப்பிட்டு அறிவிப்பு வழங்குவார்.

இவ்வழக்கின் புகார்தாருக்கு காசோலை காணாமல் போனது குறித்து உடனடியாக தகவல் தெரிவித்தேனா என்றால் தகவல் தெரிவிக்கப்பட்டது. புகார்தாருக்கு எப்போது காசோலை காணாமல் போனதாக அறிவிப்பு அளித்தீர்கள் என்றால் 07.1.2016 அன்று கொடுத்தோம். காசோலை வசூலுக்காக தாக்கல் செய்யும் போது அதனை எலக்ட்ரானிக் பதிவுகள் செய்யப்படுமா என்றால் ஆம்.

**<u>மறு விசாரணை</u>**

எதன் அடிப்படையில் புகார்தாரருக்கு காசோலை தொலைந்து விட்டது என சான்று அளித்தீர்கள் என்றால் ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிவிப்பின்

அடிப்படையில் சான்று வழங்கினேன். ரிசர்வ் வங்கி அளிக்கும் அறிவிப்பு வங்கி நடைமுறைகளுக்கு இறுதியான அறிக்கை என்றால் சரிதான். ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4 ஆகிய ஆவணங்கள்  அசல் காணாமல் போய் விட்டதால் அதன் ஒளி நகல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அசல் காசோலை காணாமல் போகும் பட்சத்தில் வங்கியில் இருந்து வழங்கப்படும் ஒளி நகல் காசோலை சட்டப்படி செல்லும் என்றால் சரிதான்.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.